1991 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் அவையில் தெரிவித்தபடி புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு இவைகளை எல்லாம் விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எல்லா துறையினரையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதே பதிலை தான் மீண்டும் சொல்வேன். இவைகளை எல்லாம் விரைவுபடுத்த வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அதிகாரி இவர்களுக்கு எல்லாம் அறிவுரை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கோயில் சொத்துக்கள் அதிகமாக இருப்பதால், அதற்கு ரோடு வசதியும், மின்சார வசதியும் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சில புறம்போக்குகளை பட்டா போட்டுக் கொடுப்பது பற்றியது. கோயில்கள் எல்லாம் இதிலே வராது.

வினா எண் 63. டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

63—

அவிநாசியில் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*1241 டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசியில் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவிநாசியில் ஏற்கெனவே ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1954 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, விவசாயிகளின் நலனுக்காக நன்கு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை கொடுத்து இயங்கிக் கொண்டிருக்கின்ற கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி தாலுகா, பழங்கரை கிராமத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கம், இன்னும் தனியார் நிலத்தில் இருப்பதால், அதை அரசுக்குச் சொந்தம் ஆக்கி, விவசாய பெருங்குடி மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் உறுதிபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தச் சங்கத்தைப் பற்றிய தகவல்கள் என்னிடம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய விவசாயக் கடன்கள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகள் போன்றவற்றை குறித்த நேரத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவினாசி கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் அது பணியாற்றிக் கொண்டிருக்கிறது. வேளாண் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்று விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது. இடுபொருள்கள் விற்பனையிலும் நல்லபடி வியாபாரம் நடந்து கொண்டு வருகிறது. குடிமைப் பொருள் மற்றும் இதர பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சரக்கு ஈட்டுக் கடனும் நல்ல அளவுக்கு வழங்கியிருக்கிறது. இலாபமும் ஈட்டி இருக்கிறது. மொத்தத்தில் இந்த அவினாசி கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.